அரசாங்க நிர்வாக சுற்று நிருபம் இல:197 (VII)

எனது இல. இ.548-708,
அரசாங்க நிர்வாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-07.
1982.05.31 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோருக்கும்.

சம்பள மீளாய்வுக்குழுவின் சிபார்சுகளைச் செயற்படுத்தல் -
1981.12.29 ஆந் திகதிய 197 ஆம் இலக்க அரசாங்க
நிர்வாகச் சுற்று நிருபத்திற்குத் திருத்தம்.

01. 4(VIII) ஆம் பந்தி தொடர்பாக 1981.12.31 ஆந் திகதியன்றுள்ள சம்பளம் விவாகப் படியையும் உள்ளடக்குதல் வேண்டும். "தற்காலிகச் சம்பளத் திருத்தம்" உத்தியோகத்தர் மணம் முடித்தவராயிருந்தாலுஞ்சரி மணம் முடிக்காதவராயிருந்தாலுஞ்சரி சகலருக்கும் கொடுக்கப்பட வேண்டியதுடன் கணவன் மனைவி இருவரும் அரசாங்க சேவையிலிருப்பின் இருவருக்கும் கொடுக்கப்படுதல் வேண்டும். அரசாங்க உத்தியோகத்தரின் கணவன் அல்லது மனைவி அரச கூட்டுத்தாபனத்தில் பணியாற்றின் 1982.01.01 ஆந் திகதி தொடக்கம் விவாகப்படிக்கு உரித்துடையவராவர்.

02. 1982.01.01 ஆந் திகதி தொடக்கம் 1974.02.28 ஆந் திகதிய 147 ஆம் இலக்க தாபனச் சுற்று நிருபத்தின் 5:2 ஆம் பந்தி பொருந்துடைத்தாகாது. நாள் வீதங்கள் 197 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்தின் (II) ஆம் அட்டவணைப் பிரகாரம் கணிக்கப்படுதல் வேண்டும். அச் சுற்று நிருபம் 1982.03.26 ஆந் திகதிய 197 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்தினால் திருத்தப்பட்டுள்ளது.

03. 1982.03.16 ஆந் திகதிய 197 (III) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நன்மைபெறத் தகுதியுடையோருக்கு 1982.04.26 ஆந் திகதிய 197(V) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்தின் 01 ஆம் பந்தியிலான நன்மைகள் சேரக் கூடாது.

04. 1981.12.29 ஆந் தேதிய 197 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்று நிருபத்தின் III ஆம் அநுபந்தத்தில் கூறப்பட்டிருப்பது எப்படியிருந்தாலும், கீழ்த்தர, உயர்தர அமயச் சுருக்கெழுத்தாளர்களின் நாளாந்தச் சம்பளம் 1975.04.01 ஆந் தேதி தொடக்கம் ரூபா 12.75 ஆகத் திருத்தப்பட்ட மையினும், 1982.01.01 ஆந் தேதிக்கு முன் ஆட்சேர்க்கப்பட்ட அமயச் சுருக்கெழுத்தாளர்களுக்கு 1982.01.01 ஆந் தேதி தொடக்கம் அவர்களுக்குச் சொந்தமாக நாளுக்கு 35/-ரூபா வீதம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

05. அரசாங்க உத்தியோகத்தரல்லாதவரும் பிரதியமைச்சரின் தாம உத்தியோக பூர்வமான மோட்டார் வண்டியைச் செலுத்துவதற்குப் பணிக்கமர்த்தப் பட்டவருமான ஒரு மோட்டார் வண்டிச் சாரதி 1982.01.01 ஆந் தேதி தொடக்கம் ஆண்டொன்றிற்கு 3560/-ரூபாவான நிலைப் படுத்தப்பட்ட (வேதன வேற்றுமைத்) சம்பளத்திற்கு உரித்துடையவராவர். அத்துடன் 1981.11.18 ஆந் தேதி 378 ஆம் இலக்கத் தாபனச் சுற்று நிருபத்தின் பிரகாரம் மாதா மாதம் அவ்வாறு உத்தியோகத்தருக்கும் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணுக்குத் தொடர்பான வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படுதல் வேண்டும்.

06. 1982.01.01 ஆந் தேதி தொடக்கம் தாபனக் கோவையின் VII ஆம் அதிகாரத்தின் 12:6:1 ஆம் பிரிவின் 500/-ரூபா எல்லையும், 12:6:2 ஆம் பிரிவின் 350/-ரூபா எல்லையும் முறையே 1,000/-(ஆயிரம்) ரூபாவாகவும் 750/-(எழுநூற்றைம்பது)ரூபாவாகவும் மாற்றப்பட்டுள்ளது.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்
அரசாங்க நிருவாக அமைச்சு.

நஸீர்/28